DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 702/2022

Complainant Witness : PW 1

| பெயர்: | சந்திரன் | ஜாதி: | |
|---|---|---|---|
| தந்தை / கணவர் பெயர் : | அங்கப்ப கவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 06/05/2026

(எதிரி ஆஜர்)

**புகார்தாரர் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் பதினோராம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தமிழ்நாடு போக்குவரத்து கழகம் பழனி கிளை -1ல் ஓட்டுநராக பணிபுரிந்து 2019 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு இதை தவிர்த்து வேறு தொழில் எதுவும் இல்லை. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன் மற்றும் மகள் உள்ளார்கள், இருவருக்கும் திருமணமாகிவிட்டது. 2019 ஆம் ஆண்டு நான் பணி ஓய்வு பெறும்போது எனக்கு பென்சன் எவ்வளவு என்றால் மாதம் ஒன்றுக்கு ரூ.13,000/- மட்டும். என்னுடைய சம்பளம் எனது வங்கி கணக்கு மூலமாகத்தான் வரும் என்றால் சரிதான். என்னுடைய ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் ரூ.3,00,000/த்திற்கு மேல் வரும். என்னுடைய ஆண்டு வருமானத்தில் நான் எவ்வளவு சேமித்தேன் என்றால் ரூ.1,00,000/-த்திற்கு மேல் ஒவ்வொரு ஆண்டும் சேமிப்பேன். நான் வருமான வரி செலுத்துவேன் என்றால் நான் பணியில் இருந்தபோது எனது சம்பளத்திலிருந்து தானாகவே பிடித்தம் செய்யப்பட்டது.

2) நான் தற்போது இருக்கும் வீடு சொந்த வீடா? வாடகை வீடா? என்றால் சொந்த வீடு. எனது வீட்டின் பேரில் கடன் ஏதும் உள்ளதா? என்றால் இல்லை. எனது வீடு யாருடைய பெயரில் உள்ளது என்றால் எனது மனைவியின் பெயரில் உள்ளது. என் பெயரில் சொத்து எதுவும் உள்ளதா என்றால் இல்லை. எனக்கும், எதிரிக்கும் எப்படி பழக்கம் என்றால் எனது அக்காவின் மருமகன் மூலமாகத்தான் எனக்கு பழக்கம். எனது அக்காவின் மருமகனின் பெயர் என்னவென்றால் கந்தசாமி ஆகும். மேற்சொன்ன கந்தசாமி எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் தேவரப்பன்பட்டியை சேர்ந்தவர். கந்தசாமியின் அப்பாவின் பெயர் என்னவென்றால் ராமசாமி கவுண்டர். கந்தசாமி என்ன தொழில் செய்கிறார், எங்கு தொழில் செய்கிறார் என்றால் பட்டிவீரன்பட்டியில் சொந்தமாக லேத் வைத்து தொழில் செய்து வருகிறார். கந்தசாமியின் மகன் பெயர் என்னவென்றால் அருண்கார்த்திக். அருண்கார்த்திக்கின் மனைவி பெயர் என்னவென்றால் சரண்யா. கந்தசாமிக்கும் எதிரிக்கும் எப்படி தொடர்பு என்றால் அவர்கள் இருவரும் நண்பர்கள்.

3) எதிரிக்கு நான் எப்படி பணம் கொடுத்தேன் என்றால் எனது அக்காவின் மருமகனான கந்தசாமி சொல்லித்தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். இதற்கு முன்னாடி எதிரிக்கு நான் வேறு ஏதும் தொகை கடனாக கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, இதைத்தான் முதன்முறையாக கொடுத்தேன். என்னிடம் பணம் கேட்டது யார் என்றால் எதிரி தான் பணம் கேட்டார், பணத்தை வாங்கும் தேதியன்று எதிரியுடன் கந்தசாமியும் வந்தார். பணம் வாங்கும் தேதிக்கு முன்னதாக எதிரி எனக்கு அறிமுகமானவரா என்றால் எதிரி பட்டிவீரன்பட்டியில் எலக்ட்ரிக்கல் கடை வைத்துள்ளார், அங்கு பொருட்கள் வாங்க செல்லும்போது அவரை பார்த்துள்ளேன், எதிரியுடன் எனக்கு பேசி பழக்கம் இல்லை. எதிரியின் குடும்ப விவரங்களை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கு என்ன சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி வைத்து இருக்கும் கடை யாருடைய பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4) என்னிடம் எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால் 20.06.2020 ஆம் தேதி. நான் எதிரிக்கு பணம் எப்போது கொடுத்தேன் என்றால் அன்றைய தினமே கொடுத்துவிட்டேன், எனது அக்கா மகன் கந்தசாமி அவருக்கு தெரியும் என்று சொன்னதால் நான் கொடுத்துவிட்டேன். நான் கொடுத்த பணம் எப்படி கொடுத்தேன் என்றால் என் கையிருப்பாக இருந்த ரொக்கத்தை கொடுத்தேன். நான் எத்தனை வங்கி கணக்குகள் வைத்துள்ளேன் என்றால் இரண்டு வங்கி கணக்கு வைத்துள்ளேன். ஒன்று இண்டியன் ஓவர் சீஸ் வங்கி, ஒட்டன்சத்திரம், மற்றொரு வங்கி ஸ்டேட் வங்கி, ஒட்டன்சத்திரம். எதிரிக்கு பணம் கொடுத்தபோது என்னுடைய வங்கி கணக்கில் எவ்வளவு ரூபாய் இருந்தது என்றால் எனது வங்கி எவ்வளவு தொகை இருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்லும் ரூ.10,00,000/ மானது பெரிய தொகை அதனால் நான் கையில் வைத்திருக்க வாய்ப்பு இல்லை என்றாலும், ரூ.10,00,000/-த்தை கையில் வைத்து இருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) பணம் வாங்கியதாக சொல்லப்படும்தேதியில் எத்தனை மணிக்கு எதிரி என்னிடம் பணம் பெற்றார் என்றால் மதியம் 12.00 மணிக்கு முன்னதாக பணம் பெற்றார். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலம் கொரனா தொற்று காலம் அப்போது ஊர் அடங்கு இருந்தது என்றால் சரிதான், ஆனால் எதிரி ஆஸ்பத்திரிக்கு செல்வதாக சொல்லிவிட்டு இருசக்கர வாகனத்தில் வந்து என்னிடம் பணம் பெற்று சென்றார். நான் பணம் கொடுத்தபோது எனது வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை நான் மட்டும் தான் இருந்தேன். எதிரி என்னிடம் பணம் பெற்றபோது அதற்கு ஈடாக என்ன கொடுத்தார் என்றால் செக் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த செக்கில் கையெழுத்து ஒரு மையிலும், உள்ளே பூர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் வேறொரு மையிலும் உள்ளதா என்றால் எதிரி என்னிடம் பூர்த்தி செய்யப்படாத செக்கில் கையெழுத்து செய்து கொடுத்தார்.

6) நான் யார் மூலமாக எனது சட்டபூர்வ அறிவிப்பை அனுப்பினேன் என்றால் வழக்கறிஞர் ஆறுமுகம் என்பவர் மூலமாக அறிவிப்பை அனுப்பினேன். வழக்கறிஞர் ஆறுமுகம் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் மதுரையை சேர்ந்தவர். நான் இந்த

வழக்கை வழக்கறிஞர் ஆறுமுகத்தின் மூலமாகத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்ன தேவைக்காக என்னிடமிருந்து கடன் பெற்றார் என்றால் சில்லரை செலவுக்களுக்காகவும், எதிரியின் கடன்களை தீர்ப்பதற்காகவும் பணம் வாங்கினார். ஆஜர் எதிரியை எனக்கு யாரென்றே தெரியாது என்றாலும், நான் எனது அக்காவின் மருமகன் கந்தசாமிக்கு பினாமி என்றாலும் அவருக்காக நான் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. கடந்த 05.08.2018 ஆம் தேதி எதிரி கந்தசாமியிடம் பணம் பெற்றதாக எனது அக்காவின் மருமகன் கந்தசாமி எதிரியின் மீது ரூ.12,00,000/- தரவேண்டி செக் மோசடி வழக்கு நிலக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

7) என்னிடம் காட்டப்படும் கடந்த 10.08.2016 ஆம் தேதி அன்று கந்தசாமியின் மருமகளான சரண்யாவுக்கும், எதிரிக்கும் இடையே ஏற்பட்ட விற்பனை கிரைய உடன்படிக்கை பத்திரம் குறித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சரண்யாவுக்கும், எதிரிக்கும் ஏற்பட்ட கிரைய உடன்படிக்கை பதியாததன் விளைவாக திண்டுக்கல் மாண்பமை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் முன்பு வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கந்தசாமி, சரண்யா மற்றும் எதிரிக்கு இடையேயான வழக்கு நிலுவையில் இருக்கும்பட்சத்தில் கந்தசாமி சொல்லித்தான் எதிரிக்கு நான் பணம் கொடுத்தேன் என்று சொல்லும் சங்கதி முற்றிலும் பொய்யானது என்றால் நான் மறுக்கிறேன்.

8) நான் அனுப்பிய சட்டப்பூர்வ அறிவிப்பின் மீது எதிரி கடந்த 30.12.2020 ஆம் தேதி எனது வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார், அதனை வேண்டுமென்றே இவ்வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல, எனக்கு தனிப்பட்ட எந்த பதில் அறிவிப்பும் வரவில்லை எனது வழக்கறிஞருக்கு எதிரியிடமிருந்து பதில் அறிவிப்பு பெற்றதாக எனக்கு சொல்லவில்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள செக்கானது எதிரி சரண்யாவிற்கு கிரைய உடன்படிக்கை போடும்போது கொடுத்த செக்கள் ஆகும், அப்போது கொடுத்த செக்குகளின்

எண்ணிக்கை நான்கு, அதில் ஒரு செக்கைத்தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன நான்கு செக்குகளில் இரண்டு செக்கை வைத்து கந்தசாமி நிலக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு எதிரிக்கு எதிராக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையானது எதிரி எனக்கு கொடுத்ததாகும்.

9) கடந்த 17.10.2020 ஆம் தேதி அன்று எதிரி அவரது வழக்கறிஞர் மூலமாக சரண்யா, கந்தசாமி ஆகிய இருவருக்கும் கிரைய உடன்படிக்கை பத்திரத்தை திருப்பி கொடுத்துவிட்டதாகவும், அதற்கு ஈடாக கொடுக்கப்பட்ட காசோலைகளை எதிரியிடம் திருப்பி கொடுக்கும்படியாக அறிவிப்பு அனுப்பியுள்ளார், அந்த அறிவிப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையின் எண் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை எதிரி எனக்கு கொடுத்தது தான். கந்தசாமி, சரண்யா மேலே சொல்லப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்புக்கு கடந்த 23.10.2020 ஆம் தேதி அன்று அனுப்பிய பதில் அறிவிப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட காசோலை கந்தசாமி மற்றும் சரண்யா அவர்களின் வசம் தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

10) இவ்வழக்கின் காசோலை தொகையான ரூ.10,00,000/- கொடுப்பதற்கான போதிய வருமானம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல, வசதி உண்டு. நான் பத்து லட்சம் ரூபாய் கொடுத்ததற்கான நிரூபிக்கும் சுமை என் மீது உள்ளது என்றால் சரிதான். பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட காலத்தில் கொரோனா ஊர் அடங்கு அமலில் இருந்தது, அப்போது எதிரி என்னிடம் வந்து பணம் வாங்குவதற்கான வாய்ப்பும் இல்லை, அதேபோல் எதிரிக்கு பண தேவையும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும், எதிரிக்கும் எனக்கும் நேரடியாக சம்பந்தம்

இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய் வழக்கு என்றாலும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.05.06 17:39:14 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 06/05/2026